**MCOP.No. 213/2025**
**ம.சா.1 : ராஜேஸ்வரி**
**தேதி : 18.03.2026**

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

விபத்தை நீங்கள் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான் நான் கேள்விப்பட்டேன். விபத்து பைபாஸ் ரோட்டில் தான் ஏற்பட்டது. பைபாஸ் ரோட்டிலிருந்து உங்கள் வீட்டிற்கு செல்வதற்கு பிரிவு ரோடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல அவ்வாறு பிரிவு சாலை எதுவும் இல்லை. உங்கள் கணவர் பைபாஸ் ரோட்டிலிருந்து உங்கள் வீட்டிற்கு வரும் பிரிவு சாலையில் திடீரென்று திரும்புவதற்காக பின்னால் வரும் பேருந்தை கவனிக்காமல் பிரேக் அடித்ததால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு விபத்து சமயத்தில் 62 வயது ஆகியிருந்தது. உங்கள் கணவர் விபத்து சமயத்தில் வேலைக்கு செல்லவில்லை வீட்டில் தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் வேலைக்கு செல்லாததால் தான் உங்கள் கணவரின் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல தலைக்கவசம் அணிந்திருந்தார். விபத்துக்கு முன்பு உங்கள் கணவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முழுகாரணம் உங்கள் கணவர் என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.18 17:59:22 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.